**செ.வெ.எண்-11** **நாள்-11.11.2018**

# அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற (GROUP – II) நேர்முக பதவிக்கான தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி இஆப., அவர்கள் இன்று (11.11.2018) நேரில் பார்வைிட்டார்.

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற **(GROUP – II)** நேர்முக பதவிக்கான தேர்வு நடைபெறும் கீழப்பழூர் அழகப்பா அரசினர் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் உள்ள தேர்வு மையத்தினை **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி இஆப., அவர்கள்** இன்று (11.11.2018) நேரில் பார்வைிட்டு தெரிவித்ததாவது:-

**அரியலூர் வட்டத்தில் 20** தேர்வு மையங்களில் தேர்வு நடைபெறுகிறது. அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தும் **(GROUP – II)** நேர்முக பதவிக்கான தேர்வில் மொத்த **தேர்வர்கள் 5941, வருகை புரிந்தவர்கள் 4391, தேர்வு எழுத வருகைபுரியாதவர்கள் 1550 நபர்கள், மேலும்,** நமது மாவட்டத்தில் துணை ஆட்சியர் நிலையில் 02 பறக்கும்படைகளும், வட்டாட்சியர் நிலையில் 02 நகரும் குழுக்களும், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 20 ஆய்வு அலுவலர்களும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 02 அலுவலர்களும் தேர்வு பணிகளில் ஈடுபட்டிருந்தனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வாயிவின்போது, அரியலூர் வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**